Joint Director, (Disaster Management)
26 DEC 2023
Chepauk, Chennai-5.
O/o. Commissioner of Revenue Administration

Director of Disaster Management
26 DEC 2023
Chepauk, Chennai-5.
O/o. Commissioner of Revenue Administration

**சுருக்கம்**

பேரிடர் மேலாண்மை – வடகிழக்கு பருவமழை 2023 – தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் மழை வெள்ளத்தினால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ரூ.5 இலட்சம் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,**
**பேரிடர் மேலாண்மை அலகு, பே.மே.2 பிரிவு**

**அரசாணை (நிலை) எண்.597** | **நாள் 23.12.2023**
**சோபகிருது வருடம், மார்கழி 07**
**திருவள்ளுவர் ஆண்டு 2054**

**படிக்க:**

1. அரசாணை (நிலை) எண்.579, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 09.12.2023.
2. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீடு எண். 2585, நாள்: 21.12.2023.

*****

**ஆணை:-**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செய்தி வெளியீட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில், வடகிழக்கு பருவமழை 2023–ல் ஏற்பட்ட மழை வெள்ளத்தினால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு, இழப்பீட்டுத் தொகையை ரூ.4 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்த்தி வழங்கிட அறிவித்துள்ளார்கள்.

2. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில், வடகிழக்கு பருவமழை 2023–ல் ஏற்பட்ட மழை வெள்ளத்தினால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு, இழப்பீட்டுத் தொகையாக ரூ.4 இலட்சம் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்தும் மற்றும் ரூ.1 இலட்சம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்தும் ஆக மொத்தம் ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) வழங்கலாம் என அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி–2ல் அனுமதிக்கப்பட்ட தொகையினை, தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்கள் கருவூல விதி 27 (Treasury Rules)–இன் கீழ் பயனாளிகளுக்கு பெற்று வழங்கிட அறிவுறுத்தப்படுகிறார்கள்.

4. இவ்வரசாணை நிதி துறையின் அ.சா.எண்.4133/FS/P/23, நாள் 23.12.2023–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வே. ராஜாராமன்
அரசு செயலாளர்

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும்
மாநில நிவாரண ஆணையர், சேப்பாக்கம். சென்னை–5.
அரசு முதன்மைச் செயலாளர், நிதித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.
இயக்குநர், (பேரிடர் மேலாண்மை),
தமிழ்நாடு பேரிடர் அபாய தணிப்பு முகமை,
சேப்பாக்கம், சென்னை–5.
ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குகள் துறை, சென்னை–35.
மாவட்ட ஆட்சியர்கள், தூத்துக்குடி, திருநெல்வேலி,
கன்னியாகுமரி மற்றும் தென்காசி.
மாவட்ட கருவூல அலுவலர்கள், தூத்துக்குடி,
திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை 600 018/600 035.

**நகல்**
வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை–600 009.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலர்,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு செயலாளர், வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை அவர்களின்
தனிச்செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை–600 009.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.
நிதி/(வருவாய்/வ.செ.1/வ.செ.2)த் துறை, சென்னை–600 009.
இ.கோ/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

28/12/23
பிரிவு அலுவலர்